**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8093833

1. District மாவட்டம்: Thanjavur  PS: காவல்நிலையம்: Vigilance & Anti-Corruption  Year: ஆண்டு: 2019  FIR No.: மு.த.அ. எண்: 08/2019  Date: நாள்: 31-08-2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: 7, 7-A and 12 of PC (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்: u/s 102 CrPC

3. (a) Occurrence of Offence Day: குற்ற நிகழ்வு நாள்: 30-08-2019  Date from: நாள் முதல்:  Date to: நாள் வரை:
   Time Period: நேர அளவு:  Time from: நேரம் முதல்: 17.50 Hrs  Time to: நேரம் வரை: 23-00 Hrs
   (b) Information Received at PS. Date: காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 31-08-2019  Time: நேரம்: 01-30
   (c) General Diary Reference: Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்:  Time: நேரம்: 01-30 Hrs

4. Type of Information: Written/ Oral: தகவலின் வகை: எழுத்து மூலம் / வாய் மொழியாக: Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: 1 ½ km West from P.S
   Beat Number: முறைக் காவல் எண்:  (b) Address: முகவரி: Regional transport office, Thanjavur
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S: இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District: மாவட்டம்

6. Complainant /Informant (a) Name: குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: K. Gajendran  (b) Father's/ Husband's Name: தந்தை / கணவர் பெயர்: V. [illegible]
   (c) Date / Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு: 1966  (d) Nationality: நாட்டினம்: Indian  (e) Passport No.: வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்:
   Date of Issue: வழங்கப்பட்ட நாள்:  Place of Issue: வழங்கப்பட்ட இடம்:
   (f) Occupation: தொழில்: Deputy Inspection cell officer  (g) Address: முகவரி: Thanjavur

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) N. கார்த்திகேயன் வட்டார போக்குவரத்து அலுவலர், தஞ்சாவூர் 2) திருமதி மீனாம்பாள் கண்காணிப்பாளர் 3) திரு P. ராமசாமி, [illegible] (RTO office) 4) R. வீரமணி TNSTC, Senior Trade man 5) தி. [illegible] 6) M. [illegible] (புரோக்கர்) 7) திருமதி P. [illegible], 8) A. [illegible] 9) K. [illegible] 10) A. [illegible] 11) N. [illegible] (புரோக்கர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)



10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

இன்று 31.08.2019ம் தேதி அதிகாலை 01.30 மணிக்கு, தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளராகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபொழுது தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் அவர்கள் கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு:- இன்று 30.08.2019 ஆம் தேதி மாலை தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனப்பதிவிற்கு வட்டார போக்குவரத்து அலுவலரும், அலுவலர்களும் கையூட்டு பெறுவதாக, தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான K.கஜேந்திரன் (வட்டாட்சியர்) ஆகிய எனக்கு கிடைத்த தகவலின் பேரில், தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 17.00 மணிக்கு சென்று தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்தும், அதன் பின்னர் இன்று (30.08.2019) வெள்ளிக்கிழமை 17.15 மணிக்கு ந்தேதி தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு, 17.40 மணிக்கு தஞ்சாவூர் to திருச்சி ரோட்டில் இடதுபுறம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the investigation / Refused investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் P.O.K திலாயத …… பதவி தலைவான (V&AC) நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு …………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி. அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

31/8/19
K. GAJENDRAN

31/08/2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 31-08-2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 04-00 Hr

Name: பெயர் S. MANOHARAN
Rank: நிலை DEPUTY SUPERINTENDENT OF POLICE ………No. எண் ……
Vigilance & Anti-corruption.
Thanjavur

அமைந்துள்ள வடக்கு பார்த்த இரண்டு மாடிக்கட்டிடமான தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான திரு.K.கஜேந்திரன், திருமதி.A.இராமலெட்சுமி, ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் தஞ்சாவூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.S.மனோகரன், காவல் ஆய்வாளர்கள் திரு.R.வெங்கடேசன், திருமதி.V.சசிகலா மற்றும் தஞ்சாவூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சென்று அங்கு பணியில் இருந்த தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.கார்த்திகேயன் அவர்களிடமும் மற்றும் உள்ள அலுவலர்களிடமும் தகவல் தெரிவித்து திடீர் சோதனை மேற்கொண்டபோது தயார் செய்யப்பட்ட நடவடிக்கை விபரம். இந்த திடீர் சோதனை 30.08.2019 ஆம் தேதி 17.50 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

<u>இந்த திடீர் சோதனையின்போது மாவட்டக் ஆய்வுக் குழுவினர் மற்றும் ஊழல் தடுப்ப மற்றும் கண்காணிப்பு குழுவில் இருந்த அலுவலர்கள் விபரம்.</u>

1) திரு.K.கஜேந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.
2) திருமதி.A.இராமலெட்சுமி, மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர்-I, தஞ்சாவூர் மாவட்டம்.
3) திரு.S.மனோகரன், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.
(4) திரு.R.வெங்கடேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.
(5) திருமதி.V.சசிகலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.கார்த்திகேயன் அவர்களை விசாரித்தபோது அவர் தான் காலையில் ரூ.2,000/- பணம் வீட்டில் இருந்து எடுத்து வந்ததாகவும், அதனை தனி நபர் பணப்பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும், அதில் செலவு போக மீதம் ரூ.850/- உள்ளது என்று எடுத்து ஆஜர் செய்து, அது தனது சொந்தப்பணம் என்றார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.850/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.கார்த்திகேயன் அவர்களின் அலுவலக அறையை சோதனையிட்டபோது, அவர் அமர்ந்திருந்த மேஜைக்கு இடதுபுறம் இருந்த 2 அடுக்கு ஸ்டீல் அடுக்கு ரேக்கின் மேல் அடுக்கில் இருந்த ஆவணங்களை சோதனையிட்டபோது, பிரௌன் கலர் கவரினுள் கீழ்கண்ட விபரப்படி ரூ.16,300/- இருந்தது.

அதன் விபரம்:

| Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 2,000 | 05 | 10,000 | 16,300/- |
| 500 | 12 | 6,000 | |
| 100 | 03 | 300 | |

மேற்படி ரூ.16,300/- பணத்திற்குள் சிறிய வெள்ளைத்தாளில் கீழ்கண்ட விபரப்படி எழுதபப்பட்டிருந்தது.

மாதவன் - PKT – All – 2 – 1
TnJ
Without RC.FC – 2 -1
Nissan – TCR – 1 – 0.5
கலை – TCR – 1 – 0.5
ரஜேஷ் - IDPL -1 – 1
மாதவன் - IDPL – 1 -1
டெல்டா – 21 – 23 – 0.23
மனோஜ் - FC – 4 – 4
குழந்தை – BWS – 1 – 5

மேலும் அதே கவரினுள் 2 காசோலைகள் இருந்தது. 1)கோயம்புத்தூர் பேங்க் ரோடு பாரத ஸ்டேட் வங்கியின் கணக்கு எண்.10869255334, காசோலை எண்.387759 நாள் 16.08.2019 - N.கார்த்திகேயன் என்ற இடத்தில் கையெழுத்திட்டு ரூ.4,00,000/- க்கான காசோலை யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற இடத்தில் பெயர் குறிப்பிடப்படாமல் இருந்தது.2)கோயம்புத்தூர் சாய்பாபா காலனி பாரத ஸ்டேட் வங்கியின் கணக்கு எண்.10832799502, காசோலை எண்.175864 நாள் 16.08.2019 - N.கார்த்திகேயன் என்ற இடத்தில் கையெழுத்திட்டு ரூ.5,00,000/- க்கான காசோலை யாருக்கு வழங்கப்பட வேண்டும் என்ற இடத்தில் பெயர் குறிப்பிடப்படாமல் இருந்தது. மேற்படி பணம் மற்றும் காசோலைகள் பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.கார்த்திகேயனிடம் கேட்டபோது அவர் சரியான விளக்கம் அளிக்கவில்லை. அதே இடத்தில் இருந்த ஆவணங்களில் தஞ்சாவூர் சுதா டிரைவிங் ஸ்கூல் உரிமம் புதுப்பிப்பதற்கான கோப்பு இருந்தது.

பின்னர் வட்டார போக்குவாத்து அலுவலர் திரு.N.கார்த்திகேயன் அவர்களிடம் விசாரணை செய்து ஷெட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த அவரருக்கு சொந்தமான நான்கு சக்கர வாகனமான Toyota Etios TN.59 BA 3510 வாகனத்தை சோதனையிட்ட போது

காரின் முன்சீட்டின் டேஷ்போர்டின் உள்ளே Travelus என்று Print செய்யப்பட்ட ஜீன்ஸ் பேக்கில் ரூ.26,780/- இருந்தது. மேற்படி பணம் பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.N.கார்த்திகேயனிடம் கேட்டபோது அவர் சரியான விளக்கம் அளிக்கவில்லை.

அதன் விபரம்:

| Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 2,000 | 02 | 4,000 | 26,780/- |
| 500 | 43 | 21,500 | |
| 200 | 03 | 600 | |
| 100 | 02 | 200 | |
| 50 | 09 | 450 | |
| 10 | 03 | 30 | |

அதன்பிறகு வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் அறையை சோதனையிட சென்றபோது நேர்முக உதவியாளர் பணியிடம் காலியாக உள்ளது என்றும் தற்போது கண்காணிப்பாளர் திருமதி.R.மீனாம்பாள் என்பவர்தான் கூடுதல் பொறுப்பாக பார்க்கின்றார் என்றும் தெரிவித்தனர். வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் மேஜைக்கு வலது புறம் ஒருவர் நின்றுகொண்டிருந்தார். பக்கத்தில் இருந்த செல்பில் பணத்தை திணித்துக் கொண்டிருந்தார். அவரை விசாரித்தபோது, அவர் பெயர் ஹரிஹரன் என்றும் தான் தனியாக இருசக்கர வாகனங்கள் மற்றும் LLR பதிவு பார்ட்டிக்கு செய்து கொடுப்பதாகவும் கூறினார். அவரிடம் விசாரித்து அவருக்கு அருகில் இருந்த 5 அடுக்கு சிமெண்ட் சிலாப் ஷெல்பில் மேலிருந்து 4 வது அடுக்கில் இடதுபுறம் Tanjore Auto Service என்று அச்சிடப்பட்ட பைல்களுக்கு அருகில் ரூ.10,000/- இருந்தது.

அதன் விபரம்:

| Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 100 | 100 | 10,000 | 10,000/- |

வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளரின் அலுவலக அறையின் வாசல் அருகிலேயே நின்றுகொண்டிருந்த திரு.C.விஜயராஜ் என்பவரை விசாரித்தபோது அவர் தான் No.78, 3 வது கிராஸ், முனிசிபல் காலனி, M.C.Road என்ற முகவரியில் வசிப்பதாகவும், தான் Bajaj Finance ன் ஏஜென்சியான ராஜா அசோசியேட்ஸில் மேலாளராக வேலை பார்ப்பதாகவும், தான் இன்று TN 49 BM 7663 வாகனத்தை ஆய்வுக்கு உட்படுத்த அசல் Registration Certificate ஐ எடுத்து வந்ததாகவும் கூறினார். அவரிடம் பணம் உள்ளதா என்று விசாரித்தபோது தன்னிடம் ரூ.19,230/- உள்ளது என்று கூறி எடுத்து ஆஜர் செய்தார்.

<u>அதன் விபரம்</u>:

| Rs. | No.s | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 2000 | 05 | 10,000 | 19,230/- |
| 500 | 18 | 9,000 | |
| 200 | 01 | 200 | |
| 10 | 03 | 30 | |

வட்டார போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளரின் அலுவலக அறையின் பின்புறம் இருந்த Record Room ஐ சோதனையிட்டபோது அங்கு முதல் ஸ்டீல் ஷெல்பில் அலுவலக கோப்புகளுக்கு இடையே ரூ.300/- இருந்தது. அந்த பணத்தை பற்றி RTO அலுவலக ஊழியர்களிடம் விசாரித்தபோது எவரும் மேற்படி பணத்தை உரிமை கோரவில்லை.

<u>அதன் விபரம்</u>:

| Rs. | No.s | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 100 | 03 | 300 | 300/- |

பிறகு Record Room க்கு வெளியே இருந்த ஹாலில் நின்று கொண்டிருந்த P.முத்துக்குமார் என்ற தனிநபரை விசாரித்தபோது அவர் தான் 199 தெற்கு தெரு, பாச்சூர் என்ற கவரியில் வசித்து வருவதாகவும், இதற்கு முன்பு சுதா டிரைவிங் ஸ்கூலில் வேலைபார்த்ததாகவும் தற்போது வேலை பார்க்கவில்லை என்றும், வாகனம் ரினிவல், பார்ம்ஸ் விற்பது போன்ற வேலைகளை RTO அலுவலகத்தில் பார்பதாகவும் தன்னிடம் ரூ.1,03,680/- உள்ளது என்று வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்தும், ரூ.4200/- ஐ இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்தும் எடுத்து ஆஜர் செய்தார்.

<u>அதன் விபரம்</u>:

| Rs. | No.s | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 2000 | 43 | 86,000 | 1,03,680/- |
| 500 | 34 | 17,000 | |
| 100 | 06 | 600 | |
| 20 | 03 | 60 | |
| 10 | 02 | 20 | |

<u>மற்றும்</u>:

| Rs. | No.s | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 500 | 07 | 3,500 | 4,200/- |
| 100 | 07 | 700 | |
| 20 | 03 | 60 | |
| 10 | 02 | 20 | |

Record Room க்கு வெளியே இருந்த ஹாலில் நின்று கொண்டிருந்த முத்துக்குமாருக்கு அருகில் A.ராஜேஷ் என்ற தனிநபரை விசாரித்தபோது அவர் தான் 37, முதல் தெரு, சீத்தா நகர், நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சாவூர் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தான் Pillai & Sons மற்றும் Renault Car Company Agent ஆக வேலை பார்ப்பதாகவும் தன்னிடம் ரூ.4,510/- உள்ளது என்று அவரது கருப்பு நிற லெதர் பேக்கில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அந்த பணம் பற்றி உரிய விளக்கம் அளிக்க மறுத்துவிட்டார்.

<u>அதன் விபரம்</u>:

| Rs. | No.s | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 500 | 04 | 2,000 | 4510/- |
| 200 | 04 | 800 | |
| 100 | 15 | 1,500 | |
| 50 | 03 | 150 | |
| 10 | 06 | 60 | |

பிறகு Record Room க்கு மேல்புறம் இருந்த கணக்காளர் அறையில் சோதனையிட்டபோது அங்கு இடதுபுறம் சிறப்பு நிலை கைவினைஞர் (Senior Trades man) R.வீரமணி என்பவர் அவரது மேஜையில் அமர்ந்து பணிசெய்து கொண்டிருந்தார். அவரை விசாரித்தபோது அவர் ரூ.1,110/- பணம் வீட்டில் இருந்து எடுத்து வந்ததாகவும், அதனை தனி நபர் பணப்பதிவேட்டில் பதிவு செய்ய மறந்துவிட்டதாகவும் கூறி, அந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்து தனது சொந்தப்பணம் என்றார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.1110/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் அமர்ந்திருந்த மேஜைக்கு கீழே வலதுபுறம் பச்சைநிற பிளாஸ்டிக் டிரேயில் பைல்களுக்கு இடையே ரூ.24,220/- இருந்தது.

<u>அதன் விபரம்</u>:

| Rs. | No.s | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 2000 | 1 | 2,000 | 24,220/- |
| 500 | 43 | 21,500 | |
| 200 | 02 | 400 | |
| 100 | 01 | 100 | |
| 50 | 02 | 100 | |
| 20 | 02 | 40 | |
| 10 | 08 | 80 | |

Senior Trades man R.வீரமணிக்கு அருகில் இடதுபுறம் இருந்த மேஜையில் கணக்காளர் திரு.P.ராமசாமி என்பவர் அவரது மேஜையில் அமர்ந்து பணிசெய்து கொண்டிருந்தார். அவரை விசாரித்தபோது அவர் ரூ.250/- பணம் வீட்டில் இருந்து எடுத்து வந்ததாகவும், அதனை தனி நபர் பணப்பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் கூறி, அந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்து தனது சொந்தப்பணம் என்றார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.250/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும் அலுவலக இன்றைய கணக்குகள் பற்றி கணக்காளர் ராமசாமியிடம் விசாரிக்க வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் Fancy Number பெற முன்தொகை செலுத்துவது மற்றும் Compounding Fees வசூல் செய்வது ஆகியவை தவிர மற்ற அனைத்து சேவைகளுக்குமான கட்டண தொகை முழுவதும் ஆன்லைன் மூலமே செலுத்த வேண்டும் என்றும், இன்றைய தினம் Fancy Number பெற முன்தொகையாக ரூ.6000/- மற்றும் Compounding Fees வசூல் ரூ.1450/- & 8200/- ஆகியவை வசூல் செய்யப்பட்டு மதியமே SBI Main Branch ல் செலுத்தப்பட்டுவிட்டதாக கூறி அதற்கான ரசீது-70 ஐ காண்பித்தார்.

மேலும் அவருக்கு எதிரே, அவருடைய உபயோகத்தில் இருந்த மேஜையை சோதனை செய்தபோது Account Register ஒன்று இருந்தது. அதை சோதனையிட்டபோது உள்ளே ரூ.40,640/- இருந்தது.

<u>அதன் விபரம்</u>:

| Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 2000 | 13 | 26,000 | 40,640/- |
| 500 | 29 | 14,500 | |
| 50 | 01 | 50 | |
| 20 | 2 | 40 | |
| 10 | 05 | 50 | |

மேற்படி பணம் ரூ.40,640/– பற்றி கணக்காளரிடம் கேட்டபோது தானும் கண்காணிப்பாளர் மீனாம்பாளும்தான் மேற்படி பணம் இருந்த Account Register ஐ பராமரிப்பதாக கூறி மேற்படி பணம் குறித்து உரிய விளக்கம் அளிக்காமல் இருந்தார். கண்காணிப்பாளர் மீனாம்பாளும்தான் மேற்படி பணம் இருந்த Account Register ஐ பராமரிப்பதாக கூறி மேற்படி பணம் குறித்து உரிய விளக்கம் அளிக்காமல் இருந்தார். கண்காணிப்பாளர் மீனாம்பாளிடம் விசாரித்தபோது அவரும் மேற்படி பணம் குறித்து உரிய விளக்கம் அளிக்காமல் இருந்தார். மேலும் கண்காணிப்பாளர் மீனாம்பாளிடம் அவரிடம்

உள்ள பணம் பற்றி விசாரித்தபோது அவர் தன்னிடம் ரூ.100/- உள்ளதாகவும் அதை வீட்டில் இருந்து எடுத்து வந்ததாகவும், அதனை தனி நபர் பணப்பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும் கூறி, எடுத்து ஆஜர் செய்தார், மேற்படி பணம் ரூ.100/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அதே அறையில் K.கோகுல் என்ற தனிநபரும் நின்றுகொண்டிருந்தார். அவரை விசாரித்தபோது அவர் தன்னிடம் ரூ.1,530/- இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார்.

அதன் விபரம்:

| Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 500 | 02 | 1,000 | 1,530/- |
| 100 | 03 | 300 | |
| 50 | 03 | 150 | |
| 20 | 01 | 20 | |
| 10 | 06 | 60 | |

மேலும் ஹாலில் A.வெங்கட்ராமன், N.செம்மணச்செல்வன் என்ற இரு நபர்கள் நின்று கொண்டிருந்தனர். அவர்களில் வெங்கட்ராமன் என்பவரை விசாரித்தபோது தான் 25/1716, தில்லையப்ப வாத்தியார் சந்து, பானோஜியப்பா வீதி, தஞ்சாவூர் என்ற முகவரியில் வசிப்பதாகவும் தான் RTO அலுவலகத்திற்கு ஆட்டோவிற்கு FC எடுக்க வந்ததாகவும் தன்னிடம் ரூ.4050/- இருப்பதாகவும் எடுத்து ஆஜர் செய்தார்.

அதன் விபரம்:

| Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 500 | 07 | 3,500 | 4,050/- |
| 200 | 01 | 200 | |
| 100 | 03 | 300 | |
| 50 | 01 | 50 | |

அதேபோல் செம்மணச்செல்வன் என்பவரை விசாரித்தபோது தான் 159, கீழத்தெரு, காசவளநாடுபுதூர் என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், தான் மதுக்கூரில் உள்ள சத்யா ஓட்டுநர் பயிற்சி பள்ளியில் பயிற்றுநராக கடந்த 7 வருடமாக உள்ளதாகவும், தான் இன்று Advance Number பார்க்க RTO அலுவலகத்திற்கு வந்ததாகவும் கூறி தன்னிடம் ரூ.31,550/- உள்ளது என்று எடுத்து ஆஜர் செய்தார்.

| Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 2000 | 04 | 8,000 | 31,550/- |
| 500 | 47 | 23,500 | |
| 10 | 03 | 50 | |

மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் மேற்கு பக்கம் உள்ள போட்டோ எடுக்கும் அறையில் பணியில் இருந்த எல்காட் நிறுவன அலுவலர் திரு.ஆரோக்கியரத்தீஸ் த/பெ டெக்கோ என்பவரை சோதனையிட அவர் தன்னுடைய சொந்த பணம் என ரூ.100/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் இதே பகுதியில் இருந்த கண்காணிப்பாளர் அறைக்கு முன்பக்க வராண்டாவில் நின்ற திரு.பி.சுகன் த/பெ பாலு, சீனிவாசன் நகர், தஞ்சாவூர் என்பவரை விசாரிக்க அவர் தான் துணை போக்குவரத்து ஆணையரின் வாகன ஓட்டுனர் எனவும் தான் ரூ.220/- வைத்திருப்பதாவும் அது தன்னுடைய சொந்த பணம் என்றும் கூறினார். அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. உதவியாளர் திரு.தனசேகர் என்பவரது அறையை சோதனையிட, அவரிடம் ரூ.150/- இருந்தது, அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்று கூறியதால் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அங்கு நின்ற திரு.M.நாராயணகுமார், த/பெ மோகன்ராஜ், பீமன் நகர், திருச்சி, திரு.M.மகேஷ் த/பெ முருகையன், விளார் ரோடு, தஞ்சாவூர், திரு.M.கார்த்தி, த/பெ மூக்கையன், எம்.சி. ரோடு, தஞ்சாவூர் ஆகியோர் தங்களது ஓட்டுனர் உரிமம் தொலைந்து விட்டதாகவும், அதுகுறித்து விண்ணப்பம் கொடுக்க வந்ததாகவும் கூறினார்கள். மேலும் அவர்களிடம் முறையே ரூ.300/-, ரூ.820/-, ரூ.200/- ஆகியவை இருந்தது. அந்த பணம் அவர்களுடைய சொந்த பணம் என்று கூறியதால் அவர்களிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் இதே இடத்தில் இருந்த திரு.G.தீனதயாளன், த/பெ கோவிந்தராஜன் வடக்கு தெரு, தஞ்சாவூர் என்பவரை விசாரிக்க இவர் ஓட்டுனர் உரிமத்தின் முகவரியை மாற்றம் செய்ய வந்ததாகவும் அவரிடம் பணம் எதுவும் இல்லை என கூறினார். K.கோபிநாத் த/பெ கண்ணன், மாரியம்மன் கோவில் தெரு, வீரசிங்கம்பேட்டை என்பவரிடம் ரூ.2120/-, K.சேகர், த/பெ கண்ணன், வடக்குதெரு, தஞ்சாவூர் என்பவரிடம் ரூ.50/-, A.E.மதியழகன் த/பெ இருளப்பன், பால்ராஜ் நகர், திருத்துறைப்பூண்டி என்பவரிடம் ரூ.2220/-, ராஜேந்திரன், த/பெ ரெத்தினம், வடக்குதெரு, நெடுவாக்கோட்டை என்பவரிடம் ரூ.60/-, சுப்பையன் த/பெ.கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் ரூ.300/-, திரு.மணிகண்டன் த/பெ மதி, வடக்குதெரு, நெடுவாக்கோட்டை என்பவரிடம் ரூ.3680/-

இருந்தது. இவர்களிடம் இருந்த தொகை குறித்து விசாரிக்க அந்த பணம் அவர்களுடைய சொந்த பணம் என்று கூறியதால் அவர்களது விளக்கம் திருப்தி அளிப்பதாக இருந்ததால், அவர்களிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கையின் தொடர்சியாக சரியாக விளக்கம் அளிக்கப்படாத தொகைகளை வைத்திருந்த (1) திரு.N.கார்த்திகேயன், வட்டார போக்குவரத்து அலுவலரிடம் இருந்த ரூ.43,080/-, (2) PA to RTO அறையில் நின்றிருந்த M.ஹரிகரன் (புரோக்கர்) என்பவரிடமிருந்த ரூ.10,000/-, (3) திரு.சி.விஜயராஜ் (புரோக்கர்) என்பவரிடம் இருந்த ரூ.19,230/-, (4) Record Roomல் இருந்த ரூ.300/-, (5) திரு.P.முத்துக்குமார் (புரோக்கர்) என்பவரிடமிருந்த ரூ.1,07,880/-, (6) திரு.ஏ.ராஜேஸ் (புரோக்கர்) என்பவரிடமிருந்த ரூ.4,510/-, (7) கணக்காளர் அறையில் Account Registerல் இருந்த ரூ.40,640/-, (8) திரு.K.கோகுல் (புரோக்கர்) என்பவரிடமிருந்த ரூ.1530/-, (9) கணக்காளர் அறையில் TNSTC Staff-Senior Trade man திரு.R.வீரமணி என்பவாது மேஜையின் ட்ரேயில் இருந்த பணம் ரூ.24,220/-, (10) திரு.A.வெங்கட்ராமன், (புரோக்கர்) என்பவரிடமிருந்த ரூ.4050/- மற்றும் (11) திரு.N.செம்மணச்செல்வன், (புரோக்கர்) என்பவரிடமிருந்த ரூ.31,550/- ஆக மொத்தம் ரூ.2,86,990/- யையும் மேற்படி தஞ்சாவூர் வட்டார போக்குவரத்து அலுவலரும் மற்றும் உள்ள அலுவலர்களும் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் வாகன பதிவிற்கு வந்தவர்களிடம் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும், உரிமைகோராத பணம் அவ்வாறு குற்றமுறு நடவடிக்கையின் மூலம் பெற்ற கையூட்டு தொகை மற்றும் புரோக்கர்கள் வைத்திருந்த பணம் கையூட்டாக வட்டார போக்குவரத்து அலுவலருக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் கொடுக்கவந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரிலும் நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் வட்டார போக்குவரத்து அலுவலக, அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேடு-1, இரவு காவலர் வருகை பதிவேடு-1, எல்காட் ஊழியர்கள் வருகை பதிவேடு-1, வருகை பதிவேட்டை முடிக்கும் பதிவேடு-1 மற்றும் தனி நபர் பணப் பதிவேடு 2019- 1 ஆகியவை நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. RTO அறையில் இருந்த 2 காசோலைகள் திரும்ப RTOவிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் மகஜர் 30.08.2019 ந் தேதி 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. எனவே கீழ்க்கண்ட எதிரிகள் (1) திரு.N.கார்த்திகேயன், வட்டார போக்குவரத்து அலுவலர், தஞ்சாவூர், (2) திருமதி.R.மீனாம்பாள், கண்காணிப்பாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர், (3) திரு.P.ராமசாமி, கணக்காளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், தஞ்சாவூர், (4) திரு.R.வீரமணி, TNSTC Staff-Senior Trade man, தஞ்சாவூர் (5) திரு.M.ஹரிகரன் (புரோக்கர்) No.965, 4 வது தெரு, ஆப்பிரஹாம்

பண்டிதர் நகர், தஞ்சாவூர் (6) திரு.சி.விஜயராஜ் (புரோக்கர்) No.78, 3 வது கிராஸ், முனிசிபல் காலனி, M.C. Road, தஞ்சாவூர், (7) திரு.P.முத்துக்குமார் (புரோக்கர்) 199 தெற்கு தெரு, பாச்சூர், ஒரத்தநாடு தாலுக்கா (8) திரு.ஏ.ராஜேஸ் (புரோக்கர்) 37, முதல் தெரு, சீத்தா நகர், நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சாவூர் (9) திரு.K.கோகுல் (புரோக்கர்) இந்திரா நகர், M.C.ரோடு, தஞ்சாவூர் (10) திரு.A.வெங்கட்ராமன், (புரோக்கர்) No.25/1716, தில்லையப்ப வாத்தியார் சந்து, மானோஜியப்பா வீதி, தஞ்சாவூர் (11) திரு.N.செம்மணச்செல்வன், (புரோக்கர்) No.159, கீழத்தெரு, காசவளநாடுபுதுார், ஒரத்தநாடு ஆகியோர்மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

Sir,

The above mentioned petition with seized money in the proceedings cum Mahazar has been received from the Deputy ICO, Thanjavur on 31.08.2019 at 01.30 hrs and registered as a case in Thanjavur V&AC Crime No.08/2019U/s.102 Cr.PC and 7 of PC (Amendment) Act 2018 and 7-A and 12 of PC (Amendment) Act 2018 by me on 31.08.2018 at 02.00 hrs -sd- S.Manoharan, DSP (V&AC), Thanjavur.31.08.2019

முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகாரின் அசலையும் மற்றும் திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் மகசர்ஆகியவற்றையும் கும்பகோணம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்றை நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

S. [signature] 31/08/2019
DSP (V&AC)
Thanjavur